அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 24/2016

எனது இலக்கம் : MPA/IAD/ADM/GA01/சுற்றறிக்கை

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

சுதந்திர சதுக்கம்

கொழும்பு 07

2016.10. 20

அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

அரசக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைத் தலைவர்கள்

**<u>பொலிதீன், பிலாஸ்டிக் மற்றும் இலத்திரனியல் கழிவு ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் – 2016</u>**

ஜனாதிபதிச் செயலகத்தின் இலக்கம் PS/DSP/ENV-U/WST-MGNT மற்றும் 2016.10.19 ஆந் திகதிய கடிதத்துடன் தொடர்புடையது.

02. பொலிதீன், பிலாஸ்டிக் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதுடன் நாளாந்தப் பயன்பாட்டின் பின்னர் அகற்றப்படும் பொலிதீன், பிலாஸ்டிக் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை முறையற்றதாக அப்புறப்படுத்தப்படுவதனைக் காரணமாகக் கொண்டு பல்வேறு சூழல், சுகாதார மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு பொது மக்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வாக பொலிதீன், பிலாஸ்டிக் மற்றும் இலத்திரனியல் கழிவுகளை சேகரித்தல் மற்றும் முறையாக அகற்றுவதற்காக " பொலிதீன், பிலாஸ்டிக் மற்றும் இலத்திரனியல் கழிவு ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்" இனை 2016.10.24 ஆந் திகதி முதல் 2016.10.30 ஆந் திகதி வரை நடாத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் திட்டமிடப்பட்டுள்ளது.

- சகல அரச நிறுவனங்களினுள் மற்றும் அதற்கு வெளியேயும் பொலிதீன், பிலாஸ்டிக் கழிவுகள் உட்பட திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.
- கழிவு உருவாகும் இடத்திலே உரிய வகையில் வேறுபடுத்தி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- கழிவுகளை இடுவதற்காக தரநிலையான நிற வகைமுறைகளையுடைய குப்பைத் தொட்டிகளை அமைத்தல்.
- நிறுவனத்தினுள் பொலிதீன் பயன்பாட்டினைக் குறைத்தல், பொலிதீனினால் உணவு சுற்றப்படுவதற்கு பதிலாக சுகாதார நட்பு பொதியிடல் பொருட்களைப் பயன்படுத்தலினை பிரபல்யப்படுத்துதல் மற்றும் உணவகங்களில் உணப் பொதியிடலின் போது பொலிதீன் பயன்பாட்டினை தடுப்பதற்கு ஆலோசனை வழங்குதல்.

- நிறுவனத்தினுள் மேற்குறிப்பிட்ட செயல்கள் உரிய மேற்பார்வையின் கீழ் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

04. சுற்றுச் சூழல் மற்றும் சுகாதார பிரச்சினைகளற்ற அரச நிறுவனங்களை நடாத்திச் செல்வதற்காக பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை எதிர்காலத்திலும் அமுல்நடாத்துவதற்கு முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஜே.ஜே. ரத்னசிரி

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

பிரதி:

1. ஜனாதிபதி செயலகம் – உமது இலக்கம் PS/DSP/ENV-U/WST-MGNT மற்றும் 2016.10.19 ஆந் திகதிய கடிதத்துக்கு ஏற்ப – தயவுடன் அறிந்து கொள்ளும் வகையில்